2010 மே 11]

முடித்தவர்களை அந்தக் கள்ளர் சீரமைப்புத் துறையின் பள்ளிகளிலே நியமனம் செய்கிறார்கள். கடந்த காலங்களிலே பிறமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சார்ந்த, பயிற்சி முடித்த மாணவர்களை மட்டும் நியமனம் செய்ததைப்போல, வருகின்ற காலங்களிலேயும் அங்கே இருக்கிற ஆசிரியர் பயிற்சிக் காலியிடங்களில், பிறமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்களை மட்டும் நியமனம் செய்வதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல நிதி வரவில்லை என்று சொன்னால், அரசாங்கம் உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்கும். பள்ளிகளிலே ஆசிரியர்களை நியமனம் செய்வதைப் பொறுத்தவரையில்,* Secondary Grade Teacher, *கள்ளர் வகுப்பைச் சார்ந்தவர்களைத்தான் நியமித்துக் கொண்டிருக்கின்றோம்.* P.G.–*ஆசிரியர்களை மட்டும்தான் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாகத் தேர்வு செய்து கொண்டிருக்கிறோம். ஏனென்றால்* P.G.–*ஆசிரியர்களுக்கு* demand *இருக்கிறது. நாம் எதிர்பார்த்த அளவுக்கு* P.G. *ஆசிரியர்கள் நமக்குக் கிடைப்பதில்லை. ஆகவே ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாகத் தேர்வு செய்கின்றோம். மீதி ஆசிரியர்களைக் கள்ளர் சமுதாயத்திலே இருந்துதான் நாம் எடுக்கின்றோம்.*

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 167, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

167—

பொது நூலகம்

***116997—திரு. எஸ். ராஜகுமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 மே 11

(அ) மயிலாடுதுறை மணல்மேட்டில் உள்ள பொது நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை மணல்மேட்டிலுள்ள பொது நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் நடவடிக்கை தற்போதைக்கு ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார்.

திரு. எஸ். ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாக இந்தக் கோரிக்கை இருந்து வருகிறது. அங்கே நிறைய புத்தகங்கள் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அதோடு மயிலாடுதுறை நகரத்திலிருக்கின்ற பொது நூலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்காக இடம் அளித்தால், அது கட்டித்தரப்படும் என்ற அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் இருக்கின்ற நிலத்திலிருந்து, பாதி நிலத்தை அந்தக் கட்டடம் கட்டுவதற்காக ஒதுக்கி இருக்கின்றோம். அதற்கான திட்ட மதிப்பீடுகளும் தயார் செய்து அளிக்கப்பட்டிருக்கிறது. அதையும் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய தகவலின் அடிப்படையில், அங்கே கட்டடம் கட்டுவதற்கு போதுமான இடமில்லாமல் இருக்கிறது என்பதைக் காரணமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே போதுமான இடத்தைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்ற தகவலை எனக்கு இந்த அவையின் மூலமாகத் தெரிவித்திருக்கிறார்கள். நிதி ஒதுக்கத்தைப்பற்றி எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. அங்கே

2010 மே 11]

இடமிருக்கும் என்று சொன்னால், இந்த ஆண்டே அந்த இடத்திலே கட்டடம் கட்டுவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார்.

திரு. எஸ். ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான திட்ட மதிப்பீடுகள் எல்லாம் போடப்பட்டு, மயிலாடுதுறை நகரத்தில் கடந்த ஆண்டே இடம் கொடுக்கப்பட்டு, இங்கேயுள்ள நம்முடைய மாநில அளவிலான அதிகாரிகளுக்கும் அது கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) மயிலாடுதுறை டவுனிலே. (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: நீங்கள் கேட்கக்கூடிய இடம் அந்த மணல்மேடு பகுதியிலே இருக்கிறதா அல்லது நீங்கள் வேறொரு நூலகத்தைப்பற்றி குறிப்பிடுகிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். ராஜகுமார்: ஆமாம். மயிலாடுதுறை நகரத்திலே இருக்கிற நூலகம்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: நீங்கள் குறிப்பிடுவது வேறொரு நூலகம் என்று சொன்னால், அதற்கான முன்மொழிவுகள் இருக்கும் என்று சொன்னால், அரசு அதைப்பற்றி பரிசீலிக்கும்.

திரு. எஸ். ராஜகுமார்: சரி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தாலுகாவில், மேலூர் நகரிலே இயங்கிவரும் பொது நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தர அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 11

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே உரிய இடத்தை நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஏற்பாடு செய்து ஒதுக்கித் தரக்கூடிய பட்சத்தில், அமைச்சர் அவர்கள் நிச்சயமாக முன்வருவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கமலக்கண்ணன்.

திரு. ஜெ. கமலக்கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதிக்குட்பட்ட அனக்காவூர், வந்தவாசி, தெள்ளாறு ஆகிய ஒன்றியங்களுக்கு, ஆசிரியர்களின் நீண்டகால பிரச்சினையான வீட்டு வாடகைப் படியினை, ஏனைய ஒன்றியங்கள்போல, எங்கள் தொகுதிக்கும் வழங்க நம் அரசு முன்வருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய மாவட்டங்களில் சில பகுதிகள் அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய பகுதிகள். அதைப்போல பள்ளிப்பட்டு ஒன்றியம் போன்ற பகுதிகளில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. ஆனால், இது துறையின் சார்பாக எடுக்கக்கூடிய முடிவல்ல. மற்ற துறைகளின் சார்பாக எடுக்கக்கூடிய முடிவை அமல்படுத்தக்கூடிய நிலையில் இருக்கிறோம். எனவே, இதுகுறித்து பல முறையீடுகள் அரசுக்கும் வரப்பெற்றிருக்கின்றன. இதுகுறித்து அரசு முறையான வகையில் ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், கிராமப்புறங்களிலே இருக்கிற நூலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டப்படும் என்ற ஒரு நல்ல செய்தியைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, இளைஞர்கள் படிக்காமல் நேரத்தை வீணாக்கிக்கொண்டு, பொழுதுபோக்கு இல்லாமல் அலைந்துக் கொண்டிருக்கிறார்கள். பொதுவாக

2010 மே 11]

மனிதனை நல்வழிப்படுத்துவது, நெறிப்படுத்துவது, அறிவை வளர்த்துக்கொள்வதற்குக் காரணமாக இருப்பவை நூல்கள்தான். அப்படி நூல்களைப் படித்தாலே இளைஞர்கள் மாறுவார்கள், நாட்டுப்பற்றுடையவர்களாக, சேவை நோக்கம் உடையவர்களாகத் தங்களை உயர்த்திக்கொள்ளக்கூடிய சூழ்நிலைகளெல்லாம் உருவாகக்கூடிய இளைஞர்கள் வீணாகிக் கொண்டிருக்கிற காரணத்தினாலே, இந்த கிராமப்புறத்து இளைஞர்கள் வீணாகாமல் அவர்கள் வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்கு—கிராமங்கள்தோறும் நூலகம், நீங்கள் இப்போது தொடங்கிக் கொண்டிருக்கிறீர்கள், மறுக்கவில்லை. இருந்தாலும்கூட— இன்னும் புதிய நூலகங்களை அதிகமாகத் தொடங்குவதற்கும், கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய எல்லா நூலகங்களுக்கும் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கும் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள், அவர்களுடைய உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையிலேயே பெருமையோடு அறிவித்தார்கள். அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினுடைய அடிப்படையில் தமிழகத்தில் இருக்கக்கூடிய ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்திலும், ஒவ்வொரு ஊராட்சிகளிலும் இன்றைக்கு ஒரு நூலகம் நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய முயற்சியின் காரணமாக உருவாக்கப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நடவடிக்கை தொடர்ச்சியாக எடுக்கப்பட்டு, இந்த ஆண்டு முடிவுறுகிறபோது, நடைபெறக்கூடிய 2010–2011 ஆம் ஆண்டு முடிவுறுகிறபோது, இந்தியாவிலேயே எல்லா ஊராட்சிகளிலும் நூலகம் இருக்கக்கூடிய ஒரே மாநிலம் தமிழகம்தான் என்கின்ற பெருமையை நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பெற்றுத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, கிராமப்புறங்களிலே வசிப்பவர்களுக்கு அது ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதமாக இன்றைக்கு அமைந்திருக்கிறது. அவற்றிற்குரிய நூல்களையும் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, இது ஒரு அற்புதமான ஏற்பாடு. எல்லாக் கிராமங்களிலும், நீங்கள் செல்கிறபோதுகூடப் பார்க்கலாம். பொது நூலகத்

துறையினுடைய சார்பிலும்கூட எல்லா நூலகங்களுக்கும் நூல்கள் வாங்கியிருக்கிறோம். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கடந்த நான்கு ஆண்டுகளிலே மாத்திரம் பார்த்தீர்கள் என்று சொன்னால், 11,837 தலைப்புகளில் 45.14 கோடி ரூபாய்க்கு தமிழ் புத்தகங்கள் மாத்திரம் நாம் வாங்கி நூலகங்களுக்குக் கொடுத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இது ஒரு மிகப் பெரிய சாதனை. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில், அனைத்து நூலகங்களுக்கும் புதிய புத்தகங்களை வாங்கிக் கொடுத்திருக்கிறோம். இது இளைஞர்களை நல்வழிப்படுத்துவதற்கான ஒரு மிக முக்கியமான முயற்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேரூர் தொகுதிக்குட்பட்ட குனியமுத்தூர் நகராட்சி, குறிச்சி நகராட்சி கோவைப்புதூரிலும் அதேபோல இடையர்பாளையம், மாச்சம்பாளையம் ஆகிய இடங்களில் என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நூலகம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கி, கிட்டத்தட்ட 8 மாதங்களுக்கு மேலாகிவிட்டது. ஆனால், அங்கே பார்த்தீர்கள் என்றால், நிதி ஒதுக்கினால் இடம் இருக்கிறது என்று தெரிந்துதான் நாம் ஒதுக்குகிறோம். ஆனால், ஒரேயொரு வரி பதில்தான், 'இடம் இல்லை' என்கிற அளவிலே ஏதாவது ஒரு பதிலைச் சொல்லி அந்த நூலகத் துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவரையிலும் அதைக் கட்டுவதற்குரிய நடவடிக்கையை எடுக்கவேயில்லை. ஆகவே, உடனடியாக அந்த நூலகக் கட்டடங்களைக் கட்ட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கு நன்றி. நான் இன்றைக்கே அதுகுறித்து அதிகாரிகளிடத்திலே விசாரித்து, ஏன் அந்த நடவடிக்கை தொடங்கப்படவில்லை என்பதை அறிந்து, உடனடியாக அதற்கான நடவடிக்கைகளை அரசு இன்றைக்கே எடுக்கும்.